மு: : எனது எந்திரத்தை யார் களவெடுத்தார் என்று எனக்குத் தெரியாது. நான் யாரையும் சந்தேகிக்கவில்லை.
C: : I do not know who stole my engine. I have no one to suspect.

පො: : එහෙම නම් පැමිණිල්ල ලියමු.
பொ: : அப்படியானால் உங்கள் முறைப்பாட்டை எழுதுவோம்.
P: : If so let us record your complaint.

මිනී මැරුමක් ගැන පැමිණිල්ලක්
ஒரு கொலை பற்றிய முறைப்பாடு
Complaint Regarding a Murder

පොලිස් නිලධාරියා : මොකද මේ කලබලේ ?
பொலிஸ் உத்தியோகத்தர் : என்ன பதட்டம்?
Police Officer : Why are you so exited ?

පැමිණිලිකරු : සර්! සර්! මිනි මරුමක් !! මිනි මැරුමක්!!
முறைப்பாட்டாளர் : ஐயா! ஐயா! கொலை! கொலை!!
Complainant : Sir ! Sir ! Murder !! Murder !!

පො: : කරුණාකර සන්සුන් වන්න . මොකද වුණේ කියලා කියන්න.
பொ: : தயவு செய்து அமைதியாக இருங்கள். என்ன நடந்தது என்று சொல்லுங்கள்.
P: : Please calm down. Tell me what has happened.

පැ: : සර්, මිනි මැරුමක් නාගස්වත්තේ බෝගහ ලග.
மு: : ஐயா! கொலை ஒன்று நாகஸ்வத்தை அரச மரத்துக்குப் பக்கத்திலை.
C: : Sir, a murder near the Bo tree at Nagaswatta.

පො: : ඒ සිද්දිය සිදු වූ ස්ථානය හරියට කියන්න.
பொ: : சம்பவம் நிகழ்ந்த சரியான இடத்தைச் சொல்லுங்கள்.
P: : Tell the exact place where the incident occurred.

පැ: : නාගස්වත්තේ අංක 145/16 ගේ ගාව.
மு: : இல 145/16, நாகஸ்வத்தை, வதிவிடத்துக்குக் கிட்டடியில்.
C: : Near the house No. 145/16 at Nagaswatta.

පො: : ඔබ සිද්දිය දැක්කද?
பொ: : சம்பவத்தை பார்த்தீர்களா?
P: : Did you see the incident ?

පැ: : ඔව්, මම දැක්කා .
மு: : ஆம். நான் பார்த்தேன்.
C: : Yes, I saw.

පො: : මොකද වුණේ ?
பொ: : என்ன நடந்தது?
P: : What happened ?

පැ: : මම ගේ ඉස්සරහ මිදුල අතුගාා ඉඳිද්දි මට ඇහුණා මිනිස්සු දෙන්නෙක් පාරේ හයියෙන් කෑ ගහනවා. ඊට පස්සේ මම දැක්කා ඒ අය ගහගන්නවා. ඊට පස්සේ එත්තෙනෙක් දුවලා ගිහිල්ලා වැටට හිටවලා තිබ්බ ඉන්නක් ගලවලා අරගෙන අනෙකාගේ ඔලුවට ගහනවා. එතකොට එයා වැටුනා. ඊට පස්සේ ඒ අය කුණු හරුප තිය තියා වත්තේ උවගට ගියා.
மு: : எனது வீட்டு முற்றத்தை நான் கூட்டிக் கொண்டிருந்த போது இரண்டு பேர் வீதியில் உரத்துச் சத்தம் போட்டுக் கொண்டு போவதைக் கண்டேன். அதன் பின்னர் அவர்கள் தமக்குள்ளே அடிபட்டுக் கொண்டிருப்பதையும் கண்டேன். பின்னர் அவர்களில் ஒருவர் ஓடிச் சென்று வேலியில் உள்ள தடி ஒன்றைப் பிடுங்கி மற்றவரது தலையில் அடிப்பதைக் கண்டேன். அப்போது அவர் கீழே விழுந்தார். அதன் பின் அடித்தவர் தூஷண வார்த்தைகளைப் பேசிக் கொண்டு தோட்டத்தின் மேற்பக்கமாக சென்றார்.
C: : When I was sweeping the garden in front of my house, I heard two persons shouting on the road. Then I saw them exchanging blows. I saw one of them running away and detaching a wooden rod fixed to the fence and giving a blow on the other person's head. Then he fell down . Thereafter uttering filth he went up the estate.

පො: : කීයට විතරද මේ සිද්ධිය වුණේ ?
பொ: : இந்தச் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது?
P: : At what time did the incident occur?

පැ: : උදේ 7.30 ට විතර.
மு: : கிட்டத்தட்ட காலை 7.30இற்கு நடந்தது.
C: : About 7.30 in the morning.

පො: : ඔබ තුවාල වේවිට කෙනාව දන්නව ද ?
பொ: : காயமுற்ற ஆளை உங்களுக்குத் தெரியுமா?
P: : Do you know the injured person ?

පැ: : ඔව්. මම දන්නවා. මම අදහගන්න විදියට ඒ දාබරේ ගේ පුතා සමත් කොලුවා.
மு: : ஆம், எனக்குத் தெரியும். அந்த ஆள் தாபரே என்பவரின் மகன் சமன் என நான் தெரிந்து கொண்டேன்.
C: : Yes, I Know . I recognized the person as Saman who is the son of Dabare.

පො: : ඔබ ගැහුව අයව දන්නවාද ?
பொ: : தாக்கிய ஆள் யாரென உங்களுக்குத் தெரியுமா?
P: : Do you know the person who attacked ?

පැ: : ඔව්. මම දන්නවා. ඒ වත්තේ ඉන්න උක්කුවා. අතකොට සමනුයි, කලු මල්ලියි එතන හිටියා.
மு: : ஆம், எனக்குத் தெரியும். அங்கு தோட்டத்தில் வசிக்கும் உக்குவ. அத்தகோட்ட சமனும் களுமல்லியும் அங்கு இருந்தார்கள்,
C: : Yes. I know him. That's Ukkuwa. who lives in the estate .Athakota Saman and Kalu Malli were also there.

පො: : ඔබ මොකද කළේ ?
பொ: : நீங்கள் என்ன செய்தீர்கள்?
P: : What did you do ?

පැ: : මම හයියෙන් කෑ ගැහුවිවා, ඊට පස්සේ තුවාලකාරයාව නිමලුයි රුවනුයි එක්ක රුවන්ගේ ත්‍රිවීලර් එකෙන් ඉස්පිරිතාලෙට ගෙනිව්වා.
மு: : நான் உரத்துக் கத்தினேன். அதன் பிறகு நிமலுடனும் ருவனுடனும் அடிபட்டவரை ருவனின் மூன்று சக்கர வண்டியில் ஆசுபத்திரிக்கு எடுத்துச் சென்றேன்.
C: : I screamed loudly and took the injured person to the hospital with Nimal and Ruwan in Ruwan's three wheeler.

පො: : සිද්ධිය වෙච්ච තැනට ඔබගේ නිවසේ සිට කොච්චර දුර තියෙනව ද ?
பொ: : உங்கள் வீட்டுக்கும் சம்பவம் நடந்த இடத்துக்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு இருக்கும்?
P: : What is the distance from your house to the place where the incident took place?

පැ: : මීටර 05 ක් විතර වෙන්න ඕනෑ.
மு: : கிட்டத்தட்ட 05 மீற்றர் இருக்க வேண்டும்.
C: : May be about 05 meters.

සො: : වෙන කවිද මේ සිද්ධිය දැක්කේ ?
பொ: : இந்த சம்பவத்தை வேறு யார் யார் பார்த்தார்கள்?
P: : Who else saw this incident?

පැ: : අල්ලපු ගෙදර අය දැක්කා . සිරියලතායි කුසුමයි ඒ ගොල්ලන් එක්ක හිටියා.
மு: : அங்கிருந்த அயல் வீடுகளில் இருந்தவர்கள் பார்த்தார்கள். சிறிய லதா, குசுமா என்போரும் அவர்களிடையே இருந்தார்கள்.
C: : The neighbours saw it. Siriyalatha and Kusuma were also there with them.

සො: : මොකද්ද මේ රණ්ඩුවට හේතුව ?
பொ: : இந்தச் சண்டைக்கான காரணம் என்ன?
P: : What is the reason for this quarrel?

පැ: : කුණු කාණුවක් ගැන නම් ප්‍රශ්නයක් තිබුණා. ඒක වෙන්න ඇති.
மு: : ஒரு சாக்கடை தொடர்பில் இறந்தவருடன் பிரச்சினை ஒன்று இருந்தது. இதற்கான காரணம் அதுவாகத்தான் இருக்க வேண்டும்.
C: : There was a problem regarding a drain. May be that.

සො: : තුවාලකාරයා රෝහලට අරගෙන යද්දි මොනවා හරි කිව්වාද ?
பொ: : காயமுற்றவரை மருத்துவமனைக்குக் கொண்டு போகும்போது அவர் ஏதாவது சொன்னவரா?
P: : What did the injured person say when he was being taken to the hospital?

පැ: : එයා මොකුත් කිව්වේ නෑ. එයා සිහිනැතිවයි හිටියේ. එයාගේ ඔලුවෙන් ලේ ගැලුවා.
மு: : அவர் ஒன்றும் பேச வில்லை. அவர் மயங்கி இருந்தார். அவரின் தலையிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.
C: : He didn't say anything. He was unconscious. It was bleeding from his head.

සො: : ඒ අයගේ නෑයෙක් හරි යාලුවෙක් හරි හිටියේ නැද්ද?
பொ: : அவரின் உறவினரோ சினேகிதரோ அங்கு நிற்கவில்லையா?
P: : Wasn't there anyone who was a relative or a friend of the injured one?

පැ: : ඒ කවුරුත් හිටියේ නෑ. අසල්වැසියො විතරයි හිටියේ.
மு: : அங்கு எவரும் இருக்கவில்லை. அயலவர்கள் மட்டும் தான் அங்கு இருந்தார்கள்.
C: : None was there. There were only neighbours.

සො: : ප්‍රශ්නේ විසඳන්න කවුරුත් ආවේ නැද්ද ?
பொ: : சச்சரவைத் தீர்த்து வைக்க ஒருவரும் முன்வரவில்லையா?
P: : Didn't anyone come forward to settle the quarrel ?

පැ: : එතනට කවුරුත් ආවේ නෑ.
மு: : அந்த இடத்துக்கு எவரும் வரவில்லை.
C: : No body came there.

පො: : නව මොනවද කියන්න තියෙන්නේ ?
பொ: : நீங்கள் சொல்வதற்கு வேறு என்ன இருக்கு?
P: : What else have you got to say?

පැ: : මම ආවේ මේ සිද්ධිය ගැන කියන්නයි. වෙන මොකුත් මට කියන්න නෑ
மு: : இந்த சம்பவத்தை அறிவிக்கவே நான் வந்தேன். நான் சொல்வதற்கு வேறு எதுவும் இல்லை.
C: : I came to inform you about this incident. I have nothing else to say.

මාර්ග නීති කඩකිරීමක්
போக்கு வரவுச் சட்ட மீறல்
A Traffic Offence

මහ පාරේ දී
பெருந்தெருவில்
On the Highway

රියදුරු : ඇයි නැවැත්තුවේ රාළහාමි ?
சாரதி : ஐயா! ஏன் என்னை நிறுத்தினீர்கள்?
Driver : Why did you stop me officer ?

පොලිස් නිලධාරිය : මහත්තයා රතු එළිය නොතා (රතු එළිය තියෙද්ද) රථය පැදවූ නියයි නැවැත්තුවේ. කරුණාකර රියදුරු බලපත්‍රයයි, ආදායම් බලපත්‍රයයි, රක්ෂණ සහතිකයයි දෙන්න.
(අදාල බලපත්‍ර පෙන්වයි)
பொ.உ. : ஐயா! சிவப்பு வெளிச்சத்தைக் கவனிக்காமல் நீங்கள் வாகனத்தை ஓட்டியதால் நிறுத்தினேன். தயவு செய்து சாரதி அனுமதிப் பத்திரத்தையும், வரியணப் பத்திரத்தையும், காப்புறுதிப் பத்திரத்தையும் தாருங்கள். (குறிப்பிட்ட பத்திரங்களை காட்டுதல்)
Police Officer : Because you drove on without heeding the red light. Please hand over your driving license, revenue license and the insurance certificate.
(Shows the relevant documents)

රි: : රතු එළිය මම දැක්කේ නැහැ. පුලුවන්නම් උදව්වක් කරන්න රාළහාමි.
சா: : மன்னிக்கவும். நான் சிவப்பு வெளிச்சத்தைக் கவனிக்கவில்லை. முடியுமானால் எனக்கு உதவுங்கள்.
D: : Sorry. I did not see the red light. So please help me if possible.

පො: : කණගාටුයි. මට ඔබගේ රියදුරු බලපත්‍රය තියාගන්න වෙනවා. මේ තාවකාලික බලපත්‍රය ගන්න. ඒක දින 14 කට වලංගුයි. මේ කාලය ඇතුළත පොලිසියට ගිහින් දඩ පනිකාවක් ලබා ගෙන දඩ මුදල් නැපැල් කාර්යාලයකට ගෙවලා රිසිට්පත පොලිසියට භාර දෙන්න. එතකොට රියදුරු බලපත්‍රය ආපසු ලබාගන්න පුලුවන්. නැත්නම් නඩු පවරන්න සිද්ධ වෙනවා.
(තාවකාලික බලපත්‍රය ඉදිරිපත් කරයි)

பொ: : மன்னிக்கவும். நான் உமது சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கிறேன். இந்த தற்காலிக உத்தரவுப் பத்திரத்தை வைத்துக் கொள்ளுங்கள். அது 14 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருக்கும். இந்தக் காலத்தினுள் நீர் பொலிசு நிலையத்துக்குச் சென்று தண்டனைப் பத்திரத்தை பெற்றுக் கொண்டு அதில் உள்ள தண்டனைத் தொகையை அஞ்சல் அலுவலகத்திற் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள். அந்தப் பற்றுச் சீட்டை பொலிசு நிலையத்திற் சமர்ப்பித்து உங்களது சாரதி அனுமதிப் பத்திரத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இந்தக் குற்றப் பணத்தைச் செலுத்தத் தவறினால் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடர நேரிடும். (தற்காலிய உத்தரவுப் பத்திரத்தை வழங்குதல்)

P: : Sorry . I have to keep your driving licence. You take this temporary permit . It is valid for 14 days. Within this period you go to the Police Station and obtain a Spot Fine Form, go to a Post Office , pay the fine there and obtain a receipt . Produce that receipt to the Police Station and then you will get back your driving licence. If you fail to pay the fine you will be prosecuted.

(Provides the temporary permit)

පොලීසියේ දී

பொலிசு நிலையத்தில்

At the Police Station

ரீ: : රාළහාමි, මට මේකට දඩ කොළයක් දෙන්න.

சா: : ஐயா, இதற்கு தண்டனை பத்திரம் ஒன்றைத் தாருங்கள்.

D: : Officer, Please give me a spot fine form for this.

පො: : මහත්තයා වාඩිවෙන්න. දඩ කොළයක් ඉක්මනින් ලියලා දෙන්නම්.(විනාඩි පහකට පසු) මෙන්න දඩ කොළය. නියමිත කාලය ගෙවෙන්න ඉස්සර තැපැල් කාර්යාලයට ගෙවලා රිසිට්පත ගෙනත් දෙන්න.

பொ: : ஐயா இருங்கள். தண்டனைப் பத்திரத்தை உடனடியாக எழுதித் தருகிறேன். (5 நிமிடத்திற்கு பின்) இந்தாருங்கள் தண்டனைப் பத்திரம். குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துங்கள், அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டை இங்கு கொண்டுவந்து தாருங்கள்.

P: : Sit down sir. Well I will write a fine form for you.

(After five minutes)

Here is your Spot Fine Form. Pay the fine to a Post Office and bring the receipt here within the specified time.

ரீ: : ස්තූතියි.

சா: : நன்றி..

P: : Thank you.

පසු දිනෙක නැවත පොලීසියේ දී

பொலிசு நிலையத்தில் பின்னொரு நாள்

At the Police Station on a subsequent date

ரீ: : මෙන්න රාළහාමි රිසිට් පත.

(පොලිස් නිලධාරියා රිසිට්පත ලබාගෙන බලපත්‍රය ආපසු දෙයි)

(iii) சா: : ஐயா இந்தாருங்கள், பற்றுச் சீட்டு.
(பொலிசு உத்தியோகத்தர் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டு சாரதிப்பத்திரத்தைத் திருப்பிக்கொடுக்கிறார்)

D: : Here is the receipt, officer.
(The Police Officer obtains the receipt and returns the driving licence)

පො: : මහත්තයා මෙන්න රියදුරු බලපත්‍රය.
பொ: : இந்தாருங்கள் ஐயா உங்கள் சாரதி அனுமதிப் பத்திரம்.
D: : Here is your driving licence.

රි: : ස්තූතියි.
சா: : நன்றி.
D: : Thank you.

මුදල් ආරවුලක்
காசுப் பிணக்கு
Dispute Over Money

පොලිස් නිලධාරියා : ආයුබෝවන්! මොකක්ද කාරණේ ?
பொலிசு உத்தியோகத்தர் : வணக்கம், நீங்கள் என்ன காரணத்துக்காக வந்தீர்கள்?
Police Officer : Good morning What is your matter?

පැමිණිලිකරු : ආයුබෝවන් සර්. මං අදුනන අයෙකුට සල්ලි දුන්නා. එයාගෙන් ඒ සල්ලි ආපසු ඉල්ලුවාම එයා මග හරිනවා. ඒ ගැන පැමිණිල්ලක් දාන්න ආවේ.
முறைப்பாட்டுக்காரர் : வணக்கம், நான் எனக்குத் தெரிந்த ஒரு ஆளுக்குப் பணம் கடனாகக் கொடுத்தேன். நான் பணத்தைத் திருப்பிக் கேட்கும்போது அவர் நழுவி விடுகிறார். அதற்காக முறைப்பாடு போட வந்திருக்கிறன்.
Complainant : Good Morning Sir, I lent some money to a person known to me. When I ask for the money back he evades. I came to lodge a complaint regarding this matter

පො: : සල්ලි දුන්නේ කාටද? එයා කොහේ ද ඉන්නේ ?
பொ: : நீங்கள் பணம் கடனாகக் கொடுத்தது யாருக்கு? அவர் எந்த இடத்தைச் சேர்ந்தவர்?
P: : To whom you gave the money? Where does he live?

පැ: : සල්ලි ගත්ත කෙනා මගේ යාළුවෙක්. නම නිමල් ප්‍රනාන්දු. පදිංචිවෙලා ඉන්නේ තලවින්නේ.
மு: : நான் பணம் கடனாகக் கொடுத்த ஆள் என்னுடைய சினேகிதன். அவரது பெயர் நிமல் பர்னாந்து. அவர் தலவின்ன என்னும் இடத்தில் வசிக்கிறார்.
C: : The person who borrowed the money is a friend of mine. His name is Nimal Fernando. He resides at Thalavinna.

පො: : ඔබේ සම්පූර්ණ නම ,වයස , ජාතිය සහ ආගම කියන්න. ඔබ විවාහ වෙලාද? පදිංචි ලිපිනය එතෙම කියන්න.

பொ: : உங்கள் முழுப்பெயர், வயது, தேசிய இனம், மதம், சிவில் அந்தஸ்து, முகவரி ஆகியவற்றைச் சொல்லுங்க. நீங்கள் விவாகமானவரா?

P: : Give me your full name, age, nationality and religion. Are you married? Address?

සැ: : මගේ නම නිශාන්ත විජේසේකර :වයස අවු :48 යි. ජාතිය සිංහල . ආගම බුද්ධාගම. විවාහකයි. ලිපිනය නො. 753, නවයාලතැන්න, කටුගස්තොට.

மு: : எனது பெயர் நிஷந்த விஜேசேகர, வயது 48. இனம் சிங்களவர். மதம் பௌத்தம். நான் விவாகமானவர். முகவரி இல: 753 நவலாலதன்ன கட்டுகஸ்த்தோட்ட.

C: : My name is Nishantha Wijesekara. Age 48 years. Race Sinhalese . Religion Buddhism. I am married. Address is No. 753, Navayalathenna, Katugastota.

පො: : ඔබෙන් සල්ලි ගත් කෙනා හඳුනන්නේ කොපමණ කල් සිටද?

பொ: : பணம் கொடுத்த ஆளை உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்?

P: : How long have you known the person who borrowed the money?

සැ: : අවුරුදු 15 ක් පමණ සිට එයාව හඳුනනවා . එයා මාත් එක්ක අවු. 10 ක් පමණ එකට ස්කාගර සංස්ථාවේ වැඩ කළා.

மு: : எனக்கு அவரைக் கிட்டத்தட்ட 15 வருடங்களாகத் தெரியும். அவர் வடிசாலைக் கூட்டுத்தாபனத்தில் என்னுடன் கிட்டத்தட்ட 10 வருடங்களாக வேலை செய்துள்ளார்.

C: : I have known him for about 15 years . He worked with me at the Distilleries Corporation for about 10 years.

පො: : ඔබ ඔහුට සල්ලි දුන්නේ ඇයි?

பொ: : அவருக்கு நீங்கள் ஏன் கடன் கொடுத்தீர்கள்?

P: : Why did you lend him money ?

සැ: : හදිසියේම රට යාමට වීසා ගන්න තියෙනවා. මාස මාසහතකින් විතර ආපසු දෙන්නම් කියලා රු.15,000/- ක් මගෙන් ඉල්ලුවා. මම ඔහුට ළඟින්ම ඇසුරු කළා. ඒ දවස් වල මා ළඟත් සල්ලි ටිකක් තිබුනා. ඒ නිසා මම මගේ බිරිඳගේ බැංකු පොතෙන් රු.15,000/- ක් අරගෙන දුන්නා. දැනට මාස 08 ක් විතර ගිහින්. ඔහු මට සල්ලි ආපසු දෙයි කියලා විශ්වාස කරලයි සල්ලි දුන්නේ.

மு: : அவசரமாக வெளிநாடு செல்வதற்கு விசா எடுக்கவென்று 15000/- ரூபாய் கேட்டார். அந்தப் பணத்தை கிட்டத்தட்ட மூன்று மாதங்களில் திருப்பித் தருவதாகவும் கூறினார். நான் அவருடன் நெருங்கிப் பழகியதாலும், என்னிடம் பணம் கொஞ்சம் இருந்ததனாலும் எனது மனைவியின் வங்கிக் கணக்கிலிருந்து 15000/- ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். இப்போது எட்டு மாதங்கள் சென்று விட்டன. திருப்பித் தருவார் என்று நம்பித்தான் நான் அவரிடம் கொடுத்தேன்.

C: : He asked me for Rs. 15,000/- to get a visa to go abroad and told that he would return it after about 3 months. He was a close friend of mine. I had some money those days. I withdrew Rs. 15,000/- from my wife's bank account and gave him the money. Now about 8 months have passed. I lent him money believing that he would return the money.

පො: : ඉතින් ඔහු රට ගියේ නැද්ද?
பொ: : அப்படியாயின் அவர் வெளிநாடு செல்லவில்லையா?
P: : So, didn't he go abroad?

පැ: : නැහැ.
மு: : இல்லை.
C: : No.

පො: : ඔබ ඔහුගෙන් එම මුදල් ඉල්ලුවේ නැද්ද?
பொ: : நீங்கள் அவரிடமிருந்து பணத்தைக் கேட்கவில்லையா?
P: : Didn't you ask for the money from him?

පැ: : මාස තුනකින් ආපහු දෙනවා කියලා කියපු හින්දා මාස තුනක් බලාගෙන හිටියා. ඒත් ඔහු මාස හතරක් පහුවෙලත් සල්ලි දුන්නේ නැති හින්දා මම ගිහින් එයාගෙන් සල්ලි ඉල්ලුවා. ඒත් පස්සේ දෙන්නම් කියලා කිව්වා. "ළඟදි සල්ලි ටිකක් හම්බ වෙන්න තියෙනවා. ටිකක් ඉවසන්න ඉක්මනට දෙන්නම් " කියලා දැන් කියනවා.
மு: : மூன்று மாதத்தில் தருவதாக அவர் சொன்னபடியால் மூன்று மாதம் முடியும் வரை பொறுத்திருந்தேன். நாலு மாதமாகியும் பணத்தைத் தராதபடியால் நான் அவரிடம் சென்று பணத்தைக் கேட்டேன். ஆனால் அவர் பின்னர் தருவதாகக் கூறினார். கிட்டடியில் தனக்குப் பணம் கிடைக்கும் என்றும் அதுவரையில் பொறுமையாக இருக்கும்படியும் இப்போது சொல்லுகிறார்.
C: : Yes. As he told me that he would return the money after three months I waited for three months. But, as he didn't return the money even after four months, I went to him and asked for the money. He told me that he would give it later. He now says that he would be getting some money in the near future and he asks me to be patient.

පො: : සල්ලි දෙන්නම් කිව්වා නම් ඇයි පැමිණිලි කරන්න ආවේ?
பொ: : அவர் பணத்தைத் திருப்பித் தருவதாகச் சொன்னால் ஏன் வந்து முறைப்பாடு செய்கிறீர்கள்?
P: : If he told that he would give the money back why did you come to make a complaint ?

පැ: : මට සල්ලි දෙන්නම් කිව්වත් රට පස්සේ එයා මාව දැක්කම නොදැක්ක වගේ මඟ ඇරලා යනවා. මගේ යාලුවෙකුටත් එයා කියලා තියෙනව "ඕකා මට අවනම්බු කරනවා. ඒ හින්දා මම සල්ලි දෙන්නෙ නැහැයි කියලා. ඒ නිසයි මම මේ සම්බන්ධයෙන් පැමිණිලි කරන්න ආවේ.
மு: : அவர் பணத்தைத் தருவதாகக் கூறுகிற போதிலும் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் என்னைக் காணாதவர் போல நடித்து நழுவிவிடுகிறார். நான் தன்னை அவமானப்படுத்துவதாகவும் அதனால் பணத்தைத் திருப்பிக் கொடுக்கமாட்டேன் என்றும் எனது நண்பருக்கு கூறியுள்ளார். அதனால் தான் நான் இங்கு முறைப்பாடு செய்ய வந்தேன்.
C: : Though he told that he would give me the money back, now he evades me pretending that he does not see me. He has told one of my friends that I had insulted him and therefore he will not give the money back. That is why I came to lodge a complaint regarding this.

පො: : අපි බලමු ,දෙන්නම පොලිසියට ගෙන්නලා විභාග කරන්න.මේ සම්බන්ධයෙන් සාක්ෂි එහෙම තියෙනව ද? සල්ලි දුන්න බවට ලියුම් එහෙම තියෙනවා ද?

பொ: : இரண்டு பேரையும் பொலிசு நிலையத்துக்குக் கூப்பிட்டு நாம் விசாரணை செய்வோம். இது தொடர்பாக உங்களுக்கு சாட்சிகள் உண்டா? பணம் கொடுத்ததற்கு எழுத்தில் ஏதாவது ஆவணங்களும் உண்டா?

P: : We will try to hold an inquiry calling both parties to the Police Station . Have you got any witnesses regarding this? Are there any documents to prove that money was given?

පැ: : මාස 03 කින් සල්ලි දෙන්නම් කියල ලියුමක අත්සන් අරගෙනයි එයාට සල්ලි දුන්නේ. සාක්ෂි වලට බැංකු පොත ඉදිරිපත් කරන්නත් පුළුවන්.

மு: : 03 மாதங்களின் பின்னர் பணத்தைத் திருப்பித் தருவேன் என்று அவரது கையொப்பத்தை பெற்ற பின்னர் தான் நான் பணத்தைக் கொடுத்தேன், ஆதாரமாக வங்கிப் புத்தகத்தையும் சமர்ப்பிக்க முடியும்.

C: : I lent him money on a document he signed promising that the money would be returned after 03 months. Also the bank pass book can be produced as proof.

පො: : හා. එහෙම නම් පැමිණිල්ල විභාග කරන්න එන්න කියලා පොලිසියේ මහත්තයෙක් ගෙදරට ඇවිත් කියයි. එදාට සාක්ෂියට ඉදිරිපත් කරන්න පුළුවන් හැම දෙයක්ම අරගෙන එන්න. හොඳද?

பொ: : அவ்வாறானால் பொலிசு உத்தியோகத்தர் ஒருவர் உங்க வீட்டுக்கு வந்து முறைப்பாடு தொடர்பில் விசாரணைக்கு வருமாறு கூறுவார். உரிய விசாரணை நாளில் சகல சாட்சிகளுடனும், ஆவணங்களுடனும் வாருங்கள்.

P: : If that is so a Police Officer will come to your residence and asks you to come for an inquiry. Please come prepared with your documents and witnesses to prove your case on the date.

පැ: : අනේ මහත්තයෝ. මට මගේ රු.15000/- කොහොම හරි අරන් දෙන්න. මගේ සල්ලි ටික ටික හරි අරගෙන දෙන්න.

மு: : ஐயா தயவு செய்து 15000/- ரூபாவை திரும்பப் பெற்றுத் தாருங்கள். பணத்தைத் தவணைக் கட்டணங்களிலென்றாலும் திருப்பித் தருவதற்கு ஒழுங்குகள் செய்யுங்கள்.

C: : Sir, Please get my Rs. 15,000/- back. Please make arrangements to get me the money even in instalments.

පො: : අපි බලමු. විභාග කරන දවසට එන්නකෝ. හොඳේ. කොහොම හරි ඉක්මනට දිනයක් දැනුම් දෙන්නම්.

பொ: : பார்ப்போம். விசாரணை நாளில் கட்டாயம் வாருங்கள். நாம் வேளைக்கு ஒரு நாளை உங்களுக்கு அறிவிப்போம்.

P: : We will see. Please come on the day of inquiry. Anyway we will give you an early date.

කුඹුරකට හානි සිදු කිරීමක්
நெல் வயலுக்கு சேதம் விளைவித்தல்
Causing damage to a Paddy field

පොලිස් නිලධාරියා : ආයුබෝවන්! වාඩිවෙන්න. පැමිණිල්ල මොකක්ද?
பொலிசு உத்தியோகத்தர் : வணக்கம். இருங்கள். என்ன முறைப்பாடு?
Police Officer : Good morning . Sit down please . What is your complaint ?

පැමිණිලිකරු : මහත්තයෝ, මගේ කුඹුරට ඊයේ හවස රම්බන්ඩාගේ හරක් දෙන්නෙක් පැහැල ගොයම් ටික කාලා. ඒ ගැන පැමිණිල්ලක් කරන්නයි ආවේ.
முறைப்பாட்டுக்காரர் : ஐயா, நேற்றுப் பின்னேரம் ரம்பண்டாவுக்குச் சொந்தமான இரண்டு பசுமாடுகள் எனது நெல் வயலினுள் புகுந்து நெற் பயிர்களைத் தின்று தீர்த்து விட்டன ஐயா. அது பற்றி முறைப்பாடு செய்யத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.
Complainant : Sir, last evening two cows belonging to Rambanda had entered my paddy field and eaten up the plants. I came to lodge a complaint about it.

පො: : ඔබේ නමත්, වයසත්, පුද්ගලික විස්තරත් කියන්න.
பொ: : உங்கள் பெயர், வயது, சொந்த விபரங்கள் முழுவதையும் சொல்லுங்கள்.
P: : Tell me your name, age and personal details.

පැ: : මගෙ නම හේරත් මුදියන්සේලාගේ ටිකිරිබණ්ඩා. වයස අවු.55 යි.සිංහල. බුද්ධාගම. විවාහකයි.රස්සාව ගොවිතැන. ලිපිනය අංක 47, බෝලගලපාර, හැදෙණිය.
மு: : எனது பெயர் ஹேரத் முதியான்சலாகே டிக்கிரி பண்டா. வயது 55. சிங்களவர். பௌத்தர். விவாகமானவர். தொழில், விவசாயி. முகவரி : இல: 47, போலகல வீதி, ஹேநெனிய.
C: : My name is Herath Mudiyanselage Tikiri Banda. Age 55 years. Sinhalese. Buddhist. Married. Occupation cultivator. Address No. 47, Bolagala Road, Hedeniya.

පො: : පැමිණිල්ල විස්තර ඇතිව කියන්න.
பொ: : முறைப்பாட்டை விவரமாகச் சொல்லுங்கள்.
P: : Tell me your complaint in detail.

පැ: : මම උපන්දා සිට ඉහත ලිපිනයේ පදිංචිව හිටිනවා. මගේ අප්පච්චිට (පියාට) අක්කර හාගයක් විතර විශාල කුඹුස්ගහ ලඟ කුඹුර අයිතිව තිබුණා.අප්පච්චි මැරුණට පස්සේ අවු.05 ක පමණ කාලයක් පටන් මම ඒ කුඹුර වැඩ කරනවා. මේ කන්නෙත් තවාන් දමලා පැල හිටෙවිවා. ගොයමට මාස 02ක් පමණ වයසයි. පිදීමට ආසන්නයි. ඊයේ ඒ කියන්නේ නොවැම්බර් 22 දා හවස 4.00 ට විතර මම කුඹුරට යනකොට හරක් දෙන්නෙක් කුඹුරට ඇවිත් ගොයම් කකා හිටියා. මේ හරකුන් කාගේ ද කියලා නොයා බැලුවා. උන් අපේ ගමේ පදිංචි රම්බණ්ඩාගෙ බව දැන ගන්ට ලැබුණා. පස්සේ මම මේ හරක් අල්ල ගෙන ඇවිත් කුඹුරට පහල තියෙන පොල් ගහක බැන්දා, පස්සේ රම්බන්ඩා හමුවෙලා මට වෙලා තියෙන පාඩුව ගැන කිව්වා. එතකොට ඔහු කිව්වා ඕහරක් කරපු වැරදීට

මං මොකටද වන්දි ගෙවන්නෙ? හරකුන්ගෙන්ම ඉල්ල ගන්නයි කියලා. මීට කලිනුත් රම්බන්ඩාගෙ හරක් ඇවිත් මගෙ කුඹුර පාලු කරලා තියෙනවා. ඒ අවස්ථා වලදිත් මං ඔහුට හරක් එවන්න එපා කියලා තියෙනවා. ඒත් එයා ඒක පිළි ගන්නේ නැහැ.

மு: : பிறந்த நாள் முதல் நான் மேற் கூறிய முகவரியில் வசித்து வருகிறேன். எனது தந்தை இறந்தது முதல் ஐந்து வருடங்களாக நான் கும்புக் கஹலங்க வயலில் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வருகிறேன். இந்த வயல் கிட்டத்தட்ட அரை ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இந்த வருடமும் நான் நாற்றங் காலிலிருந்து நெற் பயிர்களை நட்டுள்ளேன். இப்போது நெற் பயிர்கள் நட்டு 2 மாதங்கள் ஆகின்றன. அவை கதிர்கள் தள்ளும் நிலையில் உள்ளன. நேற்று அதாவது கார்த்திகை 22ஆம் திகதி அன்று பிற்பகல் 4 மணியளவில் நான் நெல் வயலுக்குச் சென்றபோது, இரண்டு மாடுகள் நெல் வயலினுள் புகுந்து நெற் பயிர்களை மேய்ந்து கொண்டு இருந்தன. நான் விசாரித்துப் பார்த்த பொழுது அந்த மாடுகள் எமது கிராமத்தைச் சேர்ந்த இறம்பண்டா என்பவருக்குச் சொந்தமானவை எனத் தெரிந்து கொண்டேன். நான் மாடுகளைப் பிடித்து எனது இன்னொரு வயலில் உள்ள தென்னை மரத்துடன் கட்டி வைத்துள்ளேன். அதன் பின்னர் நான் றம்பண்டாவிடம் சென்று ஏற்பட்ட சேதம் பற்றி அவரிடம் கூறியுள்ளேன். அதற்கு அவர், நான் ஏன் மாடுகளுக்கான நட்ட ஈடு கட்ட வேண்டும் அதை மாடுகளிடம் பெற்றுக்கொள்ளும் என்று கூறினார். முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் இறம்பண்டாவின் மாடுகள் நெல் வயலுக்கு சேதத்தை உண்டுபண்ணியுள்ளன. அப்போதெல்லாம் மாடுகளை எனது வயலுக்குள் வராமல் பார்த்துக் கொள் என்று இறம்பண்டாவிடம் கூறியுள்ளேன். ஆனால் அவர் அவற்றைக் கவனிக்காமல் இருந்திருக்கிறார்.

C: : From my birth I live at that address. My father owned the paddy field called Kumbukgaha Langa Kumbura which is about a half an acre. After my father's death I have been cultivating this field for over five years. Even this season I prepared a nursery and replanted it. Plants are now 2 months old and about to mature. Yesterday ,that is on November 22 nd at about 4 o' clock in the evening I went to the paddy field. I saw 2 bulls had entered it and were eating up the paddy plants. I inquired as to who owns the cattle. I came to know that they belong to Rambanda of our village. I caught these cattle and tied them to a coconut tree which is found lower down in the paddy field. Thereafer I met Rambanda and told him of the damage caused. Then he told me why he should be held reponsible for the damage caused by the cattle and that I should recover it from the cattle themslves. Rambanda's cattle have caused damages to my paddy field on previous occassions also . On all those occasions I advised Rambanda not to let his cattle enter my paddy field . But he never cares about it.

පො: : මීට ඉන්පරා කී පාරක් මේ හරත් ඔබේ කුඹුර පාලු කරලා තියෙනවා ද?

பொ: : இம்மாடுகள் முன்பு எத்தனை முறை உங்கள் நெல் வயலுக்குச் சேதத்தை உண்டு பண்ணியுள்ளன?

P: : How many times have these cattle caused damages to your paddy field earlier ?

පැ: : තුන් වතාවක් විතර පාලු කරල තියෙනව.
மு: : கிட்டத்தட்ட மூன்று முறை.
C: : About three times.

පො: : මේ ගැන ග්‍රාම නිලධාරි මහත්තයට පැමිණිලි කළේ නැද්ද?
பொ: : இது பற்றி கிராம சேவகரிடம் சொல்லவில்லையா?
P: : Didn't you report about this matter to the Gramma Niladari?

පැ: : පැමිණිලි කරලා තියෙනවා. ග්‍රාම නිලධාරි මහත්තයත් රම්බන්ඩාට මිහරක් බැඳගෙන හදන්න. අනිත් අයගේ ඉඩම්,කුඹුරු පාලු කරන්න යවන්න එපා කියලා කිව්වා. එත් රම්බන්ඩා අහන්නෙ නැහැ.
மு: : நான் அறிவித்தேன். கிராம சேவகரும் ரம்பண்டாவுக்கு மாடுகளை கட்டி வைக்கும் படியும் அவற்றை மற்றவர்களுடைய வயல்களுள்ளே செல்ல விட வேண்டாமென்றும் புத்தி கூறினர். ஆனால் ரம்பண்டா அவற்றைக் கணக்கிலெடுக்கவில்லை.
C: : Yes. I did. The Grama Niladari so advised Rambanda to keep his cattle tied and not to allow his cattle to damage paddy lands belonging to others . But Rambanda never cares.

පො: : ඔබගේ අලාභය කොච්චර ද ?
பொ: : உங்களுக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவிருக்கும்?
P: : How much is your damage ?

පැ: : රුපියල් 2000 ක් විතර වෙනවා.
மு: : அது கிட்டத்தட்ட 2000/- ரூபாவாக இருக்கும்.
C: : It would be about Rs. 2,000/-

පො: : ඔබ මේ ලියුම අරන් ගිහින් ගොවිජන සේවා නිලධාරි මහත්තයා හමුවෙලා අලාභය තක්සේරු කර ගන්න.මේ ගැන විභාග කිරීමට පොලිස් නිලධාරි මහතෙක් එවන්නම්. එයාට සිදු වී ඇති දේ සම්බන්ධයෙන් පෙන්වා දෙන්න. මිට පස්සේ ඔබේ කුඹුරට අලාභ සිදු නොවෙන්න අවශ්‍ය පියවර අපි ගන්නවා.ගස් බැඳ සිටින හරක් දෙන්නා ආපසු රම්බන්ඩට භාර දෙන්න. අලාභයට සාධාරණ මුදලක් අරගෙන දෙන්න බලන්නම්.
பொ: : இப்போது நீங்கள் இந்தக் கடிதத்தை கமநலச் சேவை உத்தியோகத்தரிடம் கொடுத்து உங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு செய்வியுங்கள். இந்த சம்பவத்தை விசாரணை செய்வதற்கு நாங்கள் பொலிசு உத்தியோகத்தர் ஒருவரை அனுப்பி வைப்போம். அவருக்கு நடந்ததையும் உங்களுக்கு ஏற்பட்டதையும் காட்டுங்கள். உங்கள் வயலில் இனிமேல் அப்படியான சேதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நீங்கள் பிடித்த மாடுகளை ரம்பண்டாவிடம் கொடுத்து விடுங்கள். உங்களுக்கு நியாயமான நட்டஈடு கிடைக்க நடவடிக்கை எடுப்போம்.
P: : Now you take this letter to Agrarian Services Officer and get your damage assessed. We shall send a Police Officer to inquire into this incident. You show him what has happened and the damage you have suffered. We shall take all necessary steps to prevent such damages to your field in future. Release the cattle that you have tied to Rambanda. We will try to get you a reasonable sum as compensation.

බැන තර්ජනය කිරීමක්
மிரட்டல்
An Intimidation

පොලිස් නිලධාරියා : ආයුබෝවන් . පැමිණිල්ල මොකද්ද ?
பொலிசு உத்தியோகத்தர் : காலை வணக்கம். என்ன முறைப்பாடு?
Police Officer : Good morning . What is your complaint?

පැමිණිලිකරු : අල්ලපු ගෙදර ප්‍රේමරත්න මට කුණු හරුපයෙන් (පරුෂ වචනයෙන්) බැනලා මරනවා කියලා තර්ජනය කළා. ඒ ගැන පැමිණිල්ලක් දාන්නයි මං ආවේ.

முறைப்பாட்டுக்காரர் : எனது வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசிக்கும் பிரேமரத்ன என்பவர் தூஷண வார்த்தைகளால் என்னை ஏசி என்னைக் கொலை செய்வதாக பயமுறுத்தினார். அந்த விடயம் பற்றி முறைப்பாடு செய்வதற்காகவே இங்கு வந்துள்ளேன்.
Complainant : My neighbour, Premaratne abused me in filth (using obscene words) and threatened to kill me. I came to make a complaint about this.

පො: : ඔබට ප්‍රේමරත්න බැන්නේ ඇයි? තර්ජනය කිරීමට හේතුවක් තියෙනවද ?
பொ: : ஏன் பிரேமரத்ன உங்களைத் திட்டினார். அவர் உங்களைப் பயமுறுத்துவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?
P: : Why did Premaratne abuse you? Has he any reason to threatening you ?

පැ: : ප්‍රේමරත්න කියනවා මම ඊයාගේ ඉඩමට කුණු දානවා කියලා.
மு: : தனது காணியில் நாங்கள் குப்பை கூளம் போடுவதாக பிரேமரத்ன கூறுகிறார்.
C: : Premaratne says that I am throwing garbage into his land.

පො: : ඉතින් ඇයි තමුන් ප්‍රේමරත්නගෙ වත්තට කුණු දාන්නෙ ?
பொ: : ஏன் அவரது தோட்டத்தினுள் நீங்கள் குப்பை கூளங்களைக் கொட்டுகிறீர்கள்?
P: : So, why are you throwing garbage into Premaratne's garden ?

පැ: : අනේ නැහැ, මහත්තයො .මංවත් මගේ පවුලවත් ප්‍රේමරත්නගෙ ඉඩමට කුණු දාන්නෙ නැහැ. අපේ වත්ත අයිනේ තමයි අපේ කුණු ගොඩ තියෙන්නෙ. ඉතින් ඒ කුණු හුළඟට, වැස්සට එතෙම එයාගෙ වත්තට යනවා. අපේ ඉඩමට ටිකක් පහතින් තමයි ප්‍රේමරත්නලගෙ ඉඩම තියෙන්නෙ. හැතැව අපි එයාගෙ වත්තට කුණු දාන්නෙ නැහැ.
மு: : இல்லை ஐயா, நானோ எனது மனைவியோ பிரேமரத்தினவின் காணியினுள் குப்பை கூளங்களைப் போடுவதில்லை. நாம் எமது குப்பை கூளங்களை எமது காணியின் ஓரத்தில் உள்ள குழி ஒன்றினுள் போடுகிறோம். காற்று அல்லது மழை குப்பையை அவரது காணியினுள் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறது. பிரேமரத்னவின் காணி எமது காணியிலும் பார்க்க பதிவான இடத்தில் உள்ளது. நாம் அவரது காணியினுள் குப்பை கூளங்களைக் கொட்டுவதில்லை.

C: : No. Sir neither I , nor my wife throw the garbage into Premaratne's land. Our garbage dump is at the edge of our land. Wind or rain can carry that garbage into his garden. Premaratne's land is at a little lower level than our land. It is not that we throw garbage into his land.

පො: : ඔබේ නම, වයස , ජාතිය , ආගම, විවාහ වෙලාද, ගෙදර ලිපිනය එහෙම කියන්න.

பொ: : உங்கள் பெயர், வயது, தேசிய இனம், மதம், விவாகம் செய்ததா, வீட்டு முகவரி ஆகியவற்றைக் கூறுங்கள்.

P: : Give me your name , age, nationality, race and, religon. Are you married? What is your home address and so on .

පැ: : මගෙ නම ජයසුන්දර මුදියන්සේලාගේ කිරිබණ්ඩා .වයස අවු.47 යි. සිංහල, බුද්ධාගම. විවාහකයි .රැකියාව කුලි වැඩ. ලිපිනය අංක 98, සමනල මාවත, අරුප්පල , මහනුවර.

(සිද්ධිය විස්තර කරයි.)

ප්‍රේමරත්න අපේ ගේ ඉස්සරහට ඇවිත් දකුණු අතේ දබරකිල්ල දික් කරලා පෙන්නලා, කකුල පොළොවේ ගහලා, කෑ ගහලා කුණු කරපෙන් බැනලා තර්ජනය කළා.

மு: : எனது பெயர் ஜயசுந்தர முதியான்சலாகே கிரிபண்டா. வயது 47 சிங்களவர்; பௌத்தர்; விவாகமானவர். நான் தொழிலாளியாக வேலை செய்கிறேன். முகவரி: 98, சமனல மாவத்தை, அருப்பொல, கண்டி.

(சம்பவம் பற்றி விபரிக்கிறார்)

பிரேமரத்ன எனது வீட்டை நோக்கி வந்து இடது கை ஆட்காட்டி விரலை நீட்டிக் காட்டியபடி அவரின் காலை நிலத்தில் அடித்து என்னைத் தூஷண வார்த்தைகளால் உரத்து சத்தமாக ஏசி பயமுறுத்தினார்.

C: : My name is Jayasundara Mudiyanselage Kiribanda. Age 47 years. Sinhala. Buddhist. Married. I work as a labourer. My address is 98, Samanala Mawatha, Aruppola, Kandy.

(Describes the incident)

Premaratne came towards my house. While standing in front of my house, he pointed his forefinger, beat his feet on the ground and started abusing me using obscene words

පො: : මොනවද ඔබට කිව්ව පරුෂ වචන ?

பொ: : அவர் உபயோகித்த தகாத வார்த்தைகளைக் கூறுங்கள்?

P: : What are the obscene words he used.?

පැ: : අඩෝ ! පාහර බල්ලා, කොච්චර එපා කිව්වත් තොගෙ වත්තෙ තියෙන කුණු අපේ වත්තට දානවා. ආයි දාල තිබුණොත් තෝයි තොගෙ පවුලේ අයයි ඉතුරු කරන්නේ නෑ. මං තොපි ඔක්කෝමලා බාවනවා කියලා . කරමත් උඩට උස්සාගෙන කෑ ගැහුවා.

மு: : "அடோ பறை நாயே! அதைச் செய்ய வேண்டாமென்று எத்தனை முறை சொல்லிவிட்டேன். நீ உன்னுடைய தோட்டத்திலிருந்து குப்பை கூளங்களை என்னுடைய தோட்டத்துக்குள்ளா வீசுகிறாய். நீ மீண்டும் அதைச் செய்தால் உன்னையும், குடும்பத்தவர்களையும் கொலை செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு தனது சாரத்தை மேலே தூக்கி உரத்து சத்தமிட்டார்.

C: : "Ado! Son of a bitch ! You continue to throw garbage from your garden into my garden, in spite of my warnings. If you do so again I shall not spare you and your family . I shall lay you all down " He shouted raising his sarong .

පො: : ඒ වේලාවේ ඔබ මොකද කළේ ?

பொ: : அந்த நேரத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்?

P: : What did you do at that time ?

පැ: : මං මොකුත් නොකියා අහගෙන හිටියා.

மு: : நான் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆனால் கேட்டுக் கொண்டிருந்தேன்.

C: : I didn't utter a word, but kept on listening.

පො: : ප්‍රේමරත්න බනින කොට වෙන කවුද කිද්ධිය වුණු තැන හිටියේ ?

பொ: : பிரேமரத்ன உங்களைத் திட்டியபோது அந்த இடத்தில் வேறு யாராவது இருந்தார்களா?

P: : When Premaratne was abusing you who else were there at the scene?

පැ: : මගේ නෝනයි (බිරිඳ), ලස ගෙදර ආනන්දයි, එයාගේ නෝනයි හිටියා.

மு: : எனது மனைவி, எனது அயல் வீட்டுக்காரர் ஆனந்த, அவரது மனைவி ஆகியோர் நின்றனர்.

C: : My wife and my neighbour Ananda and his wife were there.

පො: : ඔබට පහර දීමක් කළාද?

பொ: : உங்களுக்கு அடித்தாரா?

P: : Were you assaulted ?

පැ: : නෑ. මට ගැහුවේ නෑ.

மு: : இல்லை. எனக்கு அடிக்கவில்லை.

C: : No. I was not assaulted.

පො: : ඔබට මීට පෙරත් මෙවැනි තර්ජන තිබුණද? මීට ඉස්සරත් පැමිණිලි කරලා තියෙනවාද?

பொ: : இத்தகைய அச்சுறுத்தல் முன்னரும் இருந்ததா? முன்னர் ஏதும் முறைப்பாடு செய்தீர்களா?

P: : Were you threatened by him earlier? Have you made any complaints before?

පැ: : මීට ඉස්සෙල්ලා පැමිණිලි කරන්න පොලිසියට ආවෙ නැහැ. ඒත් මීට ඉස්සරත් අපේ ගේ ඉස්සරහට ඇවිත් බනිනවා. ඒත් මම ඒවා ගණන් ගන්නේ නැතුව ඉන්නවා. එහෙම ඉන්නකොට බනිනවා වැඩි හිතයි පැමිණිලි කරන්න ආවෙ.

மு: : இதற்கு முன் முறைப்பாடு செய்வதற்கு நான் பொலிசு நிலையத்துக்கு வரவில்லை. ஆனால் முன்னரும் பல சந்தர்ப்பங்களில் அவர் இவ்வாறு செய்தார். ஆனால் நான் அவற்றைப் பொருட்படுத்தாமல் இருந்தேன். நான் அப்படி இருப்பதனால்தான் இந்தத் திட்டுதல் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதனால்தான் நான் இந்த முறைப்பாட்டைச் செய்ய வந்திருக்கிறேன்.

C: : I have not complained to the Police earlier . But on previous occasions too, he has scolded us. However, I remained silent without taking any notice of his abuses. Because I remained silent he became even more abusive. That is why I came to lodge a complaint.

පො: : වෙන මොනවද කියන්න තියෙන්නේ ?

பொ: : இன்னும் ஏதாவது நீங்கள் சொல்ல இருக்கிறதா?

P: : What else have you got to say ?

පැ: : මට තර්ජනය කරන කොට මගේ තෝනත් ආනන්දත් වගාගේ තෝනත් හිටියා. ඉතින් බනින කොට හරිම ලජ්ජාවක් මට ඇති වුණේ.අපිව බාවනවා කිව්ව නිසා බයකුත් ඇති වුණා. ඒ නිසා අපිට අපේ පාඩුවේ ඉන්න ඉඩ සලසා දෙන්න කියලා තමයි ඉල්ලන්නෙ.

மு: : என்னை அவர் அச்சுறுத்தும் போது எனது மனைவி, ஆனந்த, அவரது மனைவி ஆகியோர் அங்கு நின்றனர். அவர் அவ்வாறு என்னைத் தூசிக்கும் போது நான் அவமானப்பட்டேன். உங்களைக் கொன்று விடுவேன் என்று அவர் கூறியபோது எனக்குப் பயமும் வந்தது. எனவே நான் வேண்டிக் கொள்ளுவது என்னவென்றால் எங்களை அமைதியாக வாழ விட்டு விட வேண்டும் என்பது தான்.

C: : When he was threatening me, my wife as well as Ananda and his wife were there. So when he abused me, I felt very much ashamed. And when he said he would lay us down I felt frightened. So, what I request is that we be allowed to live in peace.

පො: : මේ ගැන පොලිස් බලා පරීක්ෂණයක් කරන්න පොලිස් නිලධාරියෙක් එයි. දැන් ගිහින් ප්‍රශ්න ඇති කරගන්නෙ නැතුව ඉන්න.

பொ: : ஒரு பொலிசு உத்தியோகத்தர் உங்கள் வீட்டுக்கு வருவார். விசாரணை நடத்துவார். இப்போது நீங்கள் வீட்டுக்குப் போய் பிரச்சினை இல்லாமல் இருங்கள்.

P: : A Police Officer will visit you to look into this and hold an inquiry. Now go back and avoid getting involved.

පහර දීමක්
தாக்குதல்
An Assault

පොලිස් නිලධාරියා : ආයුබෝවන් ! මොකද්ද පැමිණිල්ල ?

பொலிசு உத்தியோகத்தர் : காலை வணக்கம், உங்கள் முறைப்பாடு என்ன?

Police Officer : Good Morning! What is your complaint ?

පැමිණිලිකරු : අපේ මහත්තයෝ, අල්ලපු ගෙදර ටිකිරිබණ්ඩා මට ගැහුවා.

முறைப்பாட்டாளர் : ஐயா! எனது அயல் வீட்டில் வசிக்கும் டிக்கிரி பண்டா எனக்கு அடித்துப் போட்டார்.

Complainant : Sir, My neighbour Tikiri Banda assaulted me.

පො: : ඇයි ගැහුවෙ? මොනවද වුණේ ? කොහේද ඉන්නේ ?

பொ: : ஏன் அடித்தார், என்ன நடந்தது? நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

P: : Why did he assault? How did it happen? Where do you live?

පැ: : මං සඳිංවී වෙලා ඉන්නෙ ගොහාගොඩ. අල්ලපු ගෙදර ටිකිරිබණ්ඩා පයෙ හවස 6ට විතර අපේ ගේ ඉස්සරහට ඇවිත් කුණු හරුපෙන් බැනලා මගෙ දකුණු කම්මුලට ගැහුවා. ඒ නිසා ඒ පැත්ත ඉදිමිලත් තියෙනවා.
(පැමිණිලිකරු ඔහුගේ දකුණු කම්මුල පෙන්වීමෙන් පසු කම්මුල ඉදිමී ඇති බවට පොලිස් නිලධාරියා නිරීක්ෂණය කරයි.)

மு: : நான் கொஹகா கொடையில் வசிக்கிறேன். அடுத்த வீட்டு டிக்கிரி பண்டா என்பவர் நேற்றுப் பின்னேரம் ஆறு மணியளவில் எங்கள் வீட்டுக்கு முன் வந்து தூஷண வார்த்தைகளால் ஏசி எனது வலது பக்க கன்னத்தில் அடித்தார். அதனால் எனது கன்னம் வீங்கியுள்ளது. (முறைப்பாட்டாளர் தனது கன்னத்தை காட்டுகிறார். பொலிஸ் உத்தியோகத்தர் வீங்கியிருந்த கன்னத்தைப் பார்த்து குறித்துக்கொள்கிறார்.)

C: : I am living at Gohagoda. Tikiri Banda of the adjoining house came in fornt of our house at about 6.00 p.m , shouted at me in filth and slapped me on my right side. As a result that side is swollen.
(Complainant shows the cheek and the Police Officer obsreves the swelling.)

පො: : ගසන්න හේතුව මොකක්ද?

பொ: : அவர் அடித்ததற்கான காரணம் என்ன?

P: : What is the cause for slapping ?

පැ: : අපි ඉන්න ගේ ටිකිරිබණ්ඩගෙ කියලා හැමදාම අපිට බනිනවා. ගෙයින් යන්න කියල මීට පෙරත් තර්ජනය කරලා තියෙනවා. එහෙම ගෙදරින් යන්න කියලා අපිට බනිනකොට මම ගිහින් කිව්වා. මේ ගේ අපි කල්ලි දීලා අරගෙන තියෙන්නෙ. ගේ ඔයාලගෙ කියනවා නම් කුඩුවක් දාලා උනාවී යෙන් තියෝගයක් ගන්න. එතකොට අපි යන්නම් කියලා . මම ටිකිරිබණ්ඩා එක්ක හොඳින් කථා කරන්නයි ගියේ. ඒත් එයා මට ගැහුවා.

மு: : நாங்கள் வசிக்கும் வீடு தன்னுடையது என்று சொல்லி ஒவ்வொரு நாளும் எங்களை ஏசுகிறார். முன்னர் பல சந்தர்ப்பங்களில் வீட்டை விட்டு வெளியேறுமாறு அவர் எங்களை அச்சுறுத்தியுள்ளார். அதேமாதிரி வீட்டை விட்டு வெளியேறுமாறு அவர் எங்களை ஏசும்போது நான் அவரிடம் கூறினேன் "நாம் இந்த வீட்டை பணம் கொடுத்து வேண்டியுள்ளோம். இந்த வீடு உங்களுடையது என்றால் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து நீதிமன்றக் கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள். அத்தகைய கட்டளை ஒன்றின் பேரில்தான் வீட்டை விட்டு வெளியேறுவோம்" என்று, நான் டிக்கிரி பண்டாவிடம் சென்று பிரச்சினையை பரஸ்பரம் தீர்த்துக் கொள்வோம் என்று சொல்ல அவர் எனக்கு அடித்துப் போட்டார்.

C: : Every day he scolds us stating that the house we live in belongs to him. Even on previous occasions he has threatened us to leave the house. When he scolded asking

us to leave I went and told him that " we have purchased this house . If you say it is yours, file a court case and obtain a court order. We will leave only if there is such an order ". I went to meet Tikiribanda to speak amicably. But he assaulted me.

පො: : පොඩ්ඩක් ඉන්න පැමිණිල්ල ලියන්න. ඔබේ නම (සම්පූර්ණ නම) මොකක්ද? වයස කියද? ජාතිය?ආගම? රැකියාව මොකද්ද? දැනට පදිංචි වෙලා ඉන්න ස්ථානයේ ලිපිනය කියන්න.

பொ: : கொஞ்சம் பொறுங்கள். நான் உங்கள் முறைப்பாட்டை எழுதுகிறேன். உங்கள் முழுபெயர் என்ன? வயது என்ன? தேசிய இனம் என்ன? தொழில் என்ன? விவாகம் செய்துள்ளீர்களா? தற்போதைய முகவரி யாது?

P: : Wait a minute. I will take down your complaint. What is your name (in full)? What is the age? Nationality? Religon? Are you married ? Your present address?

පැ: : මගේ නම හේරත් මුදියන්සේලාගේ පියදාස. වයස අවු.45 යි. සිංහල .බුද්ධාගම. විවාහකයි. රැකියාව ගොවිතැන. ලිපිනය අංක 77, 2 කනුව, ගොහාගොඩ, කටුගස්තොට .

(සිද්ධිය සම්බන්ධයෙන් විස්තරයක් කරයි.)

மு: : எனது பெயர் ஹேரத் முதியான்சலாகே பியசேன. வயது 45. சிங்களவர், பௌத்தர், தொழில் கமம், விவாகம் செய்துள்ளேன். இல 77, 2ஆம் மைல் கல்லின் கொற்கொட, கட்டுகஸ்தோட்டை (சம்பவத்தை விளக்குகிறார்)

C: : My name is Herath Mudiyanselage Piyadasa. Age 45 yrs. Sinhalse. Buddhist. Farmer. Address No. 77, 2nd mile post, Gohagoda, Katugastota .

(Explains the incident)

පො: : මේ වෙලාවේ ඔබට ගහනවා කවුද දැක්කේ? තිවසේ වෙන කවුද ඉන්නේ?

பொ: : அவர் உங்களுக்கு அடித்ததை யாராவது பார்த்தார்களா? உங்கள் வீட்டில் வேறு யார் இருக்கிறார்கள்?

P: : Did any body see you being hit ? Were there any others in the house?

පැ: : අපේ ගෙදර මමයි මගෙ නෝනයි මගෙ දරුවෝ විපුල හා තිලක් , නෝනගේ අම්මයි මල්ලියි පදිංචි වෙලා ඉන්නවා. ඊයේ සිද්ධිය වෙනකොට නෝනගේ අම්මයි මල්ලියි තිබියා. පුතාලා දෙන්නා පන්ති වලට ගිහිල්ලා තිබියෙ.

மு: : நான், எனது மனைவி, பிள்ளைகள் விபுல, திலக், எனது மனைவியின் தாயார், எனது இளைய தம்பி ஆகியோர் எங்கள் வீட்டில் வசிக்கிறோம். நேற்று சம்பவம் நிகழ்ந்த போது மனைவியின் தாயாரும் தம்பியாரும் இருந்தார்கள். இரண்டு மகன்மாரும் வகுப்புகளுக்குச் சென்று விட்டனர்.

C: : I, my wife, my children Vipula and Thilak , my wife's mother and her younger brother are residing in my house. Yesterday at the time of the incident, my wife's mother and her younger brother were there. Two sons had gone to the classes.

පො: : කොපමණ කාලයක ඉදලා මොහුගෙන් තර්ජනය තියෙනවාද?

பொ: : எப்போதிருந்து இந்த விதத்தில் அவர் அச்சுறுத்துகிறார்?

P: : Since when is he threatening in this manner?

පැ: : අවුරුදු 2 ක විතර කාලයක ඉදලා අපිත් එක්ක රණ්ඩු වෙනවා. මීට ඉස්සරත් රණ්ඩු වෙලා මේ පොලිසියේම පැමිණිල්ලක් දැම්මා. දෙගොල්ලම පොලිසියට ගෙන්නවලා පොලිසියේ ලොකු මහත්තයා කාරණේ විභාග කරලා අපි දෙගොල්ලටම සාමයෙන් ඉන්න කියලා අවවාද කළා. ඉඩමේ අයිතියක් තියෙනවා නම් ටිකිරිබණ්ඩාට උසාවියේ නඩුවක් දාලා විසඳගන්න කියලත් උපදෙස් දුන්නා.

மு: : சிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக அவர் எங்களுடன் சச்சரவில் ஈடுபடுகிறார். இதற்கு முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் நான் ஒரு முறைப்பாட்டை செய்தேன். இரண்டு தரப்பினரையும் பொலிசு நிலையத்துக்கு அழைத்தார்கள். விசாரணையின் பின்னர் அமைதியாக வாழுமாறு இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எச்சரித்து அனுப்பினார். காணிப்பிணக்கு ஏதாவது இருந்தால் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்து நீதிமன்றத்தினூடாக தீர்வு ஒன்றைக் காணுமாறு பொலிசுப் பொறுப்பதிகாரி டிக்கிரி பண்டாவுக்கு புத்திமதி கூறினார்.

C: : He has been quarrelling with us for about two years. Even on a previous occasion, I made a complaint to this Police Station. Both the parties were summoned to the Police Station and after an inquiry the OIC warned both parties to live peacefully. He also advised Tikiri Banda to file a case and get the land dispute if any settled through the courts.

පො: : ටිකිරිබණ්ඩා මොනවා කියලද බැන්නේ? පහරදීම නිසා තවත් තුවාල තියෙනවාද ?

பொ: : டிக்கிரி பண்டா எவ்வாறு உங்களை ஏசினார்? அவர் அடித்த பிறகு உங்களுக்குக் காயம் ஏதாவது ஏற்பட்டிருந்ததா?

P: : How did Tikiri Banda scold you ? Do you have any other injuries due to the assault ?

පැ: : අඩෝ !පර බල්ලා ! තොපිව හැමදාම මං කියනවා ගෙයින් යන්න කියල. ගෙයින් පලයවි යකෝ නැත්තං ඔක්කෝමලා ගෙට දාලා ගිනි තියලා පුවිත්තනවා. තොපි දන්නෙනෑ මගෙ හැටි කියලා . ගහපු නිසා මගේ කම්මුල තුවාල වෙලා තියෙනවා. ඇඟත් රිදෙනවා.

மு: : "அடோ பறை நாயே. நான் உன்னை வீட்டை விட்டு வெளியேறுமாறு எப்போதும் சொல்லி வருகிறேன். வீட்டைவிட்டு போடா பேயா. இல்லவிட்டால் உங்கள் எல்லாரையும் வீட்டினுள் பூட்டி வீட்டுக்கு நெருப்பு வைத்து உங்கள் எல்லாரையும் எரித்து விடுவேன். உங்களுக்கு என்னைப்பற்றித் தெரியாது" என்று சொல்லி எனக்கு அடித்ததால் எனது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. அத்துடன் எனது உடம்பு முழுவதும் நோகிறது.

C: : " Ado parayah dog ! I have asked you to leave this house. If you don't quit I will put you all inside the house and set you on fire. You do not know what kind of a person I am" After the slap, there are injuries in my cheek . Even the body is paining.

පො: : ඔබට ඇති වූ තුවාල වලට ප්‍රතිකාර ලබා ගත්තද ?
பொ: : உங்களுக்கு ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றீர்களா?
P: : Have you taken any treatment for the injuries?

පැ: : නැ. මට බෙහෙත් ගන්න රෝහලට යන්න අවශ්‍යයි. පැමිණිල්ලක් කරලම රෝහලට යන්නයි ආවේ.
மு: : இல்லை. சிகிச்சை பெறுவதற்கு நான் வைத்தியசாலைக்குப் போக வேண்டும். முறைப்பாட்டைப் போட்டுவிட்டு வைத்தியசாலைக்குப் போகலாம் என்று வந்தேன்.
C: : No. I want to go to the hospital for treatments. I thought of going to the hospital after making the complaint.

පො: : මේ සම්බන්ධයෙන් විමසීම කරන්න පොලිස් නිලධාරියෙක් එයි.
(රෝහල්පතක් නිකුත් කරන අතරතුරදී)
රෝහලට ගිහින් ප්‍රතිකාර ලබා ගන්න. දොක්තර මහත්තයට මේ පෝරමය භාර දෙන්න. වෙන මොනවා හරි කරදරයක් තියෙනව නම් දැනුම් දෙන්න.
பொ: : இது சம்பந்தமாக விசாரணை செய்ய ஒரு பொலிசு உத்தியோகத்தர் வருவார். (மருத்துவமனை படிவத்தை வழங்குகையில்) மருத்துவமனைக்குப் போய் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள். இந்தப் படிவத்தை டாக்டரிடம் கொடுங்கோ. வேறு பிரச்சினை இருந்தால் எமக்கு அறிவியுங்கள்.
P: : A police officer will come for an inquiry.
(While issuing a hospital ticket)
Go to the hospital and take treatments. Hand over this form to the doctor. If you have any more problems inform us.

මායිම් ආරවුලක් II
எல்லைப் பிணக்கு II
Boundary Dispute II

පොලිස් නිලධාරිය : පැමිණිල්ලක් කරන්නද ආවේ ?
பொலிசு உத்தியோகத்தர் : முறைப்பாடு ஒன்றைச் செய்யவா வந்துள்ளீர்கள்?
Police Officer : Have you come to lodge a complaint?

පැමිණිලිකාරිය : ඔව් . මගෙ ඉඩමේ මගෙ මල්ලි බිලෙන් වැටක් හදල. ඒ ගැන පැමිණිලි කරන්නයි ආවේ.
முறைப்பாட்டாளர் : ஆம். எனது தம்பி எனக்குச் சொந்தமான காணியில் பலாத்காரமாக வேலி ஒன்றை அமைத்துள்ளார். அது பற்றி முறைப்பாடு செய்வதற்கே நான் வந்துள்ளேன்.
Complainant : Yes. My younger brother has forcibly put-up a fence in encroching my land. I have come to lodge a complaint about it.

පො: : කොහෙද ඔබ පදිංචි ?
பொ: : நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?
P: : Where do yo live?

පැ: : ගොරකදෙණියේ අංක 80 ඉඩමෙ ගෙයක් හදාගෙන පදිංචි වෙලා ඉන්නවා.

மு: : நான் கோறக்கதெனியவில் 80ஆம் இலக்கக் காணியில் நான் கட்டிய வீட்டில் வசித்து வருகிறேன்.

C: : I live in the house built by me on land bearing No. 80 at Gorakadeniya.

පො: : මල්ලි බලෙන් වැටක් ගහගෙන ඉන්නෙ ඔබ පදිංචි කිවත කිබෙන ඉඩමේමද?

பொ: : உங்கள் தம்பி பலாத்காரமாக வேலி அடைத்திருப்பது உங்கள் வீடு இருக்கும் அதே காணியிலா?

P: : Has your younger brother put-up this fence on the same land where you live?

පැ: : ඔව් .මම පදිංචි ඉඩමේ අනිත් පැත්තේ තමයි මගෙ මල්ලිගෙ ඉඩම තියෙන්නේ . මල්ලිගෙ ඉඩමයි මගෙ ඉඩමයි අම්මා දෙකට බෙදලා දුන්න එකම ඉඩමේ කොටස් දෙක .

மு: : ஆம். எனது தம்பிக்குச் சொந்தமான காணி நான் வசிக்கும் காணிக்கு எதிரில் உள்ளது. தம்பியின் இடமும் எனது இடமும் எனது அம்மா இருவருக்கும் பகிர்ந்து தந்த ஒரே காணியின் இரு பகுதிகள்.

C: : Yes. The land of my younger brother is opposite to my land. His and mine are Parts of the same land I which my mother divided and gave us.

පො: : පැමිණිල්ල ලියන්න යන්නේ. ඔබේ සම්පූර්ණ නම ? වයස? ජාතිය? ආගම? විවාහකද? පදිංචි වෙලා ඉන්න තැන ලිපිනය ?

பொ: : முறைப்பாட்டை எழுதப் போகிறேன். உங்கள் முழுப்பெயர், வயது, இனம், விவாக அந்தஸ்து, முகவரி, ஆகியவற்றைச் சொல்லுங்கள்.

P: : Now I want to note down the complaint. Your full name? Age? Race? Religion? Civil status? Address?

පැ: : මගේ සම්පූර්ණ නම රත්නායක මුදියන්සේලාගේ සිරියාවති. වයස අවු.40 යි. සිංහල. බුද්ධාගම. විවාහකයි. පුරුෂයාගේ නම එන්.බී.ජයසිංහ. ගෙදර ලිපිනය අංක 80, ගොරකදෙණිය.

மு: : எனது முழுப்பெயர் இரத்தினாயக்க முதியன்சலாகே சிரியாவதி, வயது 40, சிங்களவர், பௌத்தர், விவாகமானவர். எனது கணவரின் பெயர் என்.பீ.ஜயசிங்க, முகவரி இல: 80 கொறக்கதெனிய.

C: : My full name is Ratnayaka Mudiyanselage Siriyawathiee. Age 40 yrs. Sinhalese. Buddhist. Married. Husbands name is N. B. Jayasinghe. Address No 80, Gorakadeniya.

පො: : ඔබ පදිංචි වෙලා ඉන්න ඉඩමයි මල්ලිගෙ ඉඩමයි වෙන් කරලද තියෙන්නේ?

பொ: : நீங்கள் வசிக்கும் வீடுள்ள காணியும் உங்கள் தம்பியின் காணியும் பங்கு போடப்பட்டவையா?

P: : Are the lands where you and your brother live partitioned ?

පැ: : අපේ ඉඩමයි මල්ලි ඉන්න ඉඩමයි අම්ම ඉන්න කාලේ බෙදලා දුන්නේ.වැටක් ගහලා වෙන් කරලා නැහැ. මායිම් වශයෙන් කරාවු ගස් කිහිපයකුයි, වැටකිර ගස් පේලියකුයි තිබවලා තියෙනවා. එතනින් තමයි වෙන් කරලා තියෙන්නේ.

மு: : எனது தாயார் உயிரோடு இருக்கும் போது இந்தக் காணியை எனக்கும் எனது தம்பிக்கும் பிரித்துத் தந்தார். அது வேலி போட்டுப் பிரிக்கப்படவில்லை. எல்லையாக ஏலக்காய் செடிகளும் அல்பீசியா செடிகளும் வரிசையாக நாட்டப்பட்டுள்ளது. அது தான் எல்லையாக பாவிக்கப்படுகின்றது.

C: : When my mother was living she divided the land between me and my brother. There is no fence. The boundary line is marked a row of clove plants and albezia plants.

සො: : අම්මා දැනට ජීවතුන් අතර ඉන්නවද? බෙදා දීපු ඉඩම ඔබගේ කියා සාක්ෂි තියෙනවද ?

பொ: : இப்போது அம்மா உயிருடன் இருக்கிறாரா? அவ்வாறு பிரிக்கப்பட்ட காணி உங்களுடையதுதான் என்பதை நிரூபிப்பதற்கு சான்று ஏதாவது உண்டா?

P: : Is your mother alive ? Have you any evidence to prove that the land so divided is yours?

පැ: : අම්මා මැරිලා .අම්මා ජීවත්ව ඉන්න කාලෙ බෙදලා දුන්න බව පහළ ගෙදර ලොකු බණ්ඩා දන්නවා. ඔහුමිදෝරුවෙක් ගෙන්නලා තමයි මැනලා බෙදලා දුන්නේ.

மு: : அம்மா உயிருடன் இல்லை. அவர் உயிரோடு இருக்கும் போது இந்தக் காணியைப் பிரித்துத் தந்தார். பஹலகெதர லொக்கு பண்டா என்பவருக்கு இது பற்றித் தெரியும். நில அளவையாளரை அழைத்து அளந்தபின் தான் பிரித்து எனக்கு தந்தார்கள்.

C: : Mother is dead. She divided this land while she was living. Lokubanda of Pahalagedara knows about it. She got a surveyor to Survey the land and partition it.

සො: : ඔබ ළඟ ඔප්පුවක් තියෙනවද? සිතුරක් (ප්ලෑන් එකක්) තියෙනවාද?

பொ: : உங்களிடம் உறுதி உண்டா? வரைபடமும் இருக்கிறதா?

P: : Have you got a deed for the land ? And a plan?

පැ: : ඔප්පුවකුත් තියෙනවා. සිතුරකුත් තියනවා. ඒත් මල්ලි ඒවා ගණන් ගන්නෙ නැහැ. වැට ගහලා තියෙන තැන ඉඳලා අඩි 10 ක් විතර එයාගෙ ඉඩමට අල්ලල ආයෙත් වැටකිර වැටක් ගහල තියෙන්නේ.

மு: : உறுதியுள்ளது. வரைபடமும் உள்ளது. ஆனால் எனது தம்பி அதைப் பொருட்படுத்துவதில்லை. அவர் ஆரம்பகால வேலியிலிருந்து கிட்டத்தட்ட 10 அடி அளவு எல்லையைக் கூட்டி அல்பீசியா வேலியை அமைத்துள்ளார்.

C: : There is a deed as well as a plan, but my brother ignores them. He has put-up an albizia fence encroaching about 10 feet from my land.

සො: : මල්ලිගෙ නම මොකක්ද? එයා බැඳලද?

பொ: : தம்பியின் பெயர் என்ன? அவர் விவாகஞ் செய்துள்ளாரா?

P: : What is the name of your brother? Is he married ?

පැ: : මල්ලිගෙ නම ආර්.එම්.හිමල් . එයත් බැඳලා. එයා ඉඩම අල්ලලා වැට ගහන්නේ ගැණිගෙ ඉගැන්වීම හිතා තමයි. ගැණිගෙ නම කැතරීනා .ගැණි තමයි වැඩිගෙන්ම ඉඩමට රණ්ඩු වෙන්නෙ. අලුතින් ගහපු වැට ගලවන්න කිවාම තමයි රණ්ඩු වෙන්නෙ.

மு: : எனது சகோதரரின் பெயர் ஆர்.எம்.நிமல். அவரும் விவாகஞ் செய்துள்ளார். அவர் தனது மனைவியின் தூண்டுதலால்தான் எனது காணிக்குள் அத்துமீறி இந்த வேலியை அமைத்துள்ளார். அவரது மனைவியின் பெயர் கதரீனா. இவர்தான் என்னுடன் அநேகமாக சச்சரவு செய்பவர். புதிய வேலியை அகற்றுமாறு நான் கேட்டுக் கொண்டதால்தான் அவர்கள் என்னுடன் சண்டை போடுகின்றனர்.

C: : My brother is R. M. Nimal. He is also married. He has put up this fence encroaching my land because his wife has instigated him. His wife's name is Catherina. She is the person who quarrels with me most over the land. They quarrel with me because I asked them to remove the newly put-up fence.

පො: : මේ ගැන කොයා බලන්න නිලධාරියෙක් එවන්නම්. දැන් ගෙදර ගිහිත් මල්ලි එක්ක හරි එයාගේ පවුල එක්ක හරි රණ්ඩුවට යන්නෙ නැතුව හොඳින් ඉන්න බලන්න.

பொ: : இந்த முறைப்பாட்டைக் கவனிப்பதற்கு பொலிசு உத்தியோகத்தர் ஒருவரை அனுப்பி வைப்போம். நீங்கள் வீட்டுக்குப் போய் தம்பியுடனோ அவரது மனைவியுடனோ சண்டை பிடிக்காமல் அமைதியாக இருங்கள்.

P: : We shall send an officer to look in to this complaint. Now you may go home and live peacefully without quarrelling with your brother and his wife.

පැ: : අනේ මහත්තයෝ! මට ඕන කරලා තියෙන්නෙ පිඹුරෙ තියෙන විදිහට වැට ගහගන්නයි. ඉස්සර තිබුණෙත් ඒ විදිහටම තමයි. ඉස්සර තිබුණ විදිහටම වැට තියෙන්න අරින්න කියලා මල්ලිට අවවාද කරන්න.

மு: : ஐயோ ஐயா!! எனக்குத் தேவை வேலியை வரைபடத்தின்படி முன்பு இருந்த மாதிரி அமைக்கும்படி எனது சகோதரருக்கு அறிவுரை வழங்க வேண்டும் என்பதுதான்.

C: : Sir, all I want is to put- up the fence according to the plan that is how it was. Sir, I want you to advise my brother to keep the fence as it was earlier.

පො: : හා දැන් යන්න. පොලිසියේ මහත්තයෙක් ඇවිත් මේ පිළිබඳව කොයා බලයි.

பொ: : நீங்கள் இப்போது போகலாம். பொலிசு உத்தியோகத்தர் வந்து இது பற்றி விசாரணை மேற்கொள்ளுவார்.

P: : O.K . You may go now . A Police Officer will come to inquire this.

(පැමිණිලිකාරිය පිටව යයි.)

(முறைப்பாட்டாளர் வெளியேறுகிறார்)

(Complainant leaves)

මුදල් කොල්ලකෑමක්
பணக்கொள்ளை
Robbery of Cash

පොලිස් නිලධාරිය : මොකක්ද ඔබේ පැමිණිල්ල ?
பொலிசு உத்தியோகத்தர் : என்ன உங்கள் முறைப்பாடு?
Police Officer : What is your complaint ?

සරස්වති : මං අද පඩිසල්ලි අරගෙන ගෙදර එනකොට අදුනන්නේ නැති කෙනෙක් ඇවිත් දැලි පිහියක් පෙන්නල මගේ සල්ලි ටික උදුර ගත්තා. අනේ ! මං දැන් මොකද කරන්නේ !!
சரஸ்வதி : எனது சம்பளத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வரும்பொழுது அறிமுகம் அற்ற ஒருவன் வந்து சவர கத்தியைக் காட்டி பயமுறுத்தி எனது பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடி விட்டான். ஐயோ! நான் இப்போது என்ன செய்வேன்.
Saraswathi : While I was returning home after collecting my wages an unknown man threatned me with a razor and snatched my money. Oh ! What shall I do now !!

පො: : අපි දැන් පැමිණිල්ලක් ලියමු. මට කරුණාකරලා ඔබේ සම්පූර්ණ නම කියන්න.
பொ: : இப்போது நாம் முறைப்பாட்டை எழுதுவோம். எனவே உங்கள் முழுப்பெயரைச் சொல்லுங்கள்.
P: : Now let us write down a complaint. Tell me your full name.

ස: : සෙල්ලමුත්තු සරස්වති.
ச: : செல்லமுத்து சரசுவதி.
S: : Sellamuttu Saraswathie.

පො: : වයස කියද?
பொ: : வயது என்ன?
P: : Age?

ස: : අවුරුදු 30යි.
ச: : 30 வருடம்.
S: : 30 years.

පො: : ආගම මොකක්ද?
பொ: : உங்கள் சமயம் என்ன?
P: : What is the religion?

ස: : හින්දු .
ச: : இந்துசமயம்.
S: : Hinduism .

පො: : රස්සාව?
பொ: : என்ன தொழில்?
P: : What is your occupation?

ස: : කම්කරු .
ச: : தொழிலாளி..
S: : Labourer.

පො: : එතකොට ඔබේ ලිපිනය?
பொ: : அப்படியென்றால் உங்களுடைய முகவரி?
P: : Then, your address?

ස: : අංක 25, අරලිය උයන , නුගේගොඩ.
